## நாச்சியார் திருமொழி

1. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக

இளம்பெண்கள் கைகளில் கதிரவன் போன்ற ஒளி உடைய விளக்கையும், கலசத்தையும் ஏந்தி வந்து அழைக்க, வடமதுரை மன்னன் கண்ணன் பாதுகை அணிந்து நடந்து வருகிறார்.

இசைக்கருவிகள் மற்றும் சங்குகள் முழங்க அத்தை மகனும் 'மது' என்ற அரக்கனை அழித்தவனுமாகிய கண்ணன் புகுந்த பந்தலில் முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்டு இருந்தது. அதன்கீழ் என்னைத் திருமணம் செய்து கொள்கின்றான்.

2. ஆண்டாள் பற்றியும் நாச்சியார் திருமொழி பற்றியும் குறிப்பு வரைக.

**ஆண்டாள்:**

- ❖ பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் ஆண்டாள்.
- ❖ திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவற்றை இயற்றியுள்ளார்.
- ❖ பாமாலையோடு தான் அணிந்த பூமாலையையும் சூட்டியதால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என அழைக்கப்பட்டார்.
- ❖ பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர்,

**நாச்சியார் திருமொழி:**

- ❖ நாச்சியார் திருமொழி ஆண்டாள் பாடியது.
- ❖ 140 பாடல்களைக் கொண்டது.
- ❖ நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளது.

3. பக்தி இலக்கியம் பற்றிக் குறிப்பிடுக.

- ❖ பக்தி இலக்கியம் உணர்ச்சி மிகுந்த பாடல்களை உள்ளடக்கியது.
- ❖ இறையோடு ஒன்றுதலும் இலக்கியத்தின் பணி,
- ❖ அதன்பால் அனைவரையும் சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணி ஆகும்.